# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - பெப்ரவரி 2017

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - I

**2**

45 நிமிடம்

சுட்டெண் ........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- ✸ உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- ✸ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- ✸ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- ✸ 1 - 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.


## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்




| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |


| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |


✣ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.

✣ வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




01. 




1. 
2. 
3. 

02. 


1. 
2. 
3. 




✣ ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உருக்கள் உள்ள அடைப்பைத் தெரிவு செய்க.


03.
1. 
2. 
3. 




04.
1. 
2. 
3. 

✣ தரப்பட்டுள்ள உருக்கோலத்தில் அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.

05.  ........................

1. 
2. 
3. 

06.  ........................

1. 
2. 
3. 

✣ 07 ஆம், 08 ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

07. பொய்கையில் அன்னம்
உணவின் பெயர் அன்னம்
குழந்தையின் கன்னம்
தேர்தலில் ..............................

1. சன்னம்
2. சின்னம்
3. பன்னம்

08. வீசும் பந்து
தெருவினில் சந்து
வெற்றிக்கு முந்து
பாடுவாய்................................

1. சிந்து
2. மந்து
3. குந்து

சுட்டெண் :..................

✣ **பின்வரும் பாடலை வாசித்து 09 ஆம், 10 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

**பாம்மைப் கண்டால் நடுங்கிடுமே!**
**பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே!**
**வீம்பாய்க் கத்திக் கெட்டிடுமே!**
**விரோதி கண்ணில் பட்டிடுமே!**


09. பாடலில் விபரிக்கப்படும் பிராணி எது?

1. காகம் 2. எலி 3. தவளை


10. பாடலில் சிறப்பிக்கப்படும் பிராணியின் விரோதி எது?

1. முதலை 2. பாம்பு 3. பூனை


✣ **11 ஆம் 12 ஆம் வினாக்களில் அடைப்பிற்குள் இருக்கும் இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.**

11. 

1. PHT 2. PIT 3. POT

12. 

1. 869 2. 809 3. 868

13. 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1. 10 2. 6 3. 7

✣ **இங்குள்ள கட்டத்துக்குள் ஏதோ ஒரு ஒழுங்கில் இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. அதன்படி 14 ஆம், 15 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

14.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 10 | 15 | 20 | 45 | A |
| 1 | 4 | 7 | 25 | 40 | 55 |
| 16 | 13 | 10 | 30 | 35 | 60 |
| 19 | 22 | 25 | 28 | 31 | B |

எழுத்து A உள்ள சதுரத்துக்குப் பொருத்தமான எண் எது?

1. 65 2. 50 3. 60

15. எழுத்து B உள்ள சதுரத்துக்குப் பொருத்தமான எண் எது?

1. 34 2. 35 3. 63

16. வியாபாரி ஒருவன் மாம்பழமொன்றை ரூபாய் 25.00 இற்கு வாங்கி ரூபாய் 30.00 வீதம் விற்றதால் ரூபாய் 100.00 ஐ இலாபமாக அடைந்தான். அவன் விற்ற மாம்பழங்கள் எத்தனை?

1. 04 2. 25 3. 20

17. இரு எண்களின் கூட்டுத்தொகை 85 ஆகும். இவ் வெண்களுக்கிடையிலான வித்தியாசம் 35 ஆகும் எனின் இதில் பெரிய எண் யாது?

1. 60 2. 20 3. 75

18. 6 மனிதர்கள் 3 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை 9 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?

1. 6 நாட்கள் 2. 2 நாட்கள் 3. 18 நாட்கள்


19. யஷ்வினி காலையில் பாடசாலை நோக்கிச் செல்லும் போது அவளது நிழல் இடது கைப்பக்கம் விழுந்தது எனின் யஷ்வினி பாடசாலை நோக்கிச் செல்லும் திசை எது?

1. கிழக்கு  2. மேற்கு  3. வடக்கு

20. அபிசாயினி தமிழ்ப்பாடப் புத்தகத்தில் 35 ஆம் பக்கத்தில் இருந்து 80 ஆம் பக்கம் வரை வாசித்து முடித்தாள் எனின் அவள் வாசித்த தாள்களின் எண்ணிக்கை யாது?

1. 23  2. 45  3. 46

✧ **1 இலிருந்து 6 வரையான புள்ளிகள் இடப்பட்டுள்ள சதுரமுகிக் குற்றி ஒன்றின் மூன்று வடிவங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இதை அவதானித்து 21 ஆம், 22 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**



21. இங்கு இரு புள்ளிகள் இடப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கை யாது?

1. 3  2. 5  3. 4

22. இங்கு ஐந்து புள்ளியிடப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் எத்தனை புள்ளிகள் இருக்கும்?

1. 6  2. 4  3. 1

23. கீழ் உள்ள எழுத்துக்களின் மீது மையைப் பூசி அவ் எழுத்துக்களிற்கு எதிரே அச்சிடுமாறு புள்ளிக்கோடு வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் யாது?

| CAP |
|---|


1.   2.   3. 

24. இரு பகுதிகளும் சமனான வடிவங்களைக் கொண்ட கூட்டத்தைத் தெரிவு செய்க.

1.   

2.   

3.   

25. 

பெரிய கூம்பகம் ஒன்றின் மேற்பகுதியில் இருந்து சிறிய கூம்பக வடிவம் ஒன்றினை வெட்டி நீக்கிய பின் தோன்றும் உருவில் உள்ள உச்சிகளின் எண்ணிக்கை யாது?

1. 8  2. 6  3. 5

26. வரிசை ஒன்றின் சரி நடுவில் நிற்கும் ஏரகன் முன்னாலிலிருந்து 10 ஆவதாக உள்ளான் எனின் அவ் வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 20  2. 19  3. 21

27. 50 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட எண்களை எழுதும்போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

1. 11  2. 10  3. 9

✧ **கீழே தரப்பட்டுள்ள தகவல்களின்படி 28 ஆம், 29 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

| |
|---|
| **கலா ஒரு சிறுமி. கலாவின் அக்காவிற்கு மூன்று சகோதரிகளும் மூன்று சகோதரர்களும் உள்ளனர்.** |


28. கலாவுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?

1. 2     2. 3     3. 4


29. கலாவுக்கு எத்தனை சகோதர்கள் உள்ளனர்?

1. 3     2. 1     3. 2

30. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் உருவைத் தெரிவு செய்க.

1. 

2. 

3. 

31. சரியான ஒழுங்குமுறையில் எழுதப்பட்ட விடையைத் தெரிவு செய்க.

1. கிராமம் → நகரம் → மாகாணம் → மாவட்டம் → நாடு
2. கிராமம் → நகரம் → மாவட்டம் → மாகாணம் → நாடு
3. கிராமம் → மாவட்டம் → நகரம் → மாகாணம் → நாடு

✧ **32 ஆம், 33 ஆம் வினாக்களில இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**


32. விகாரை → விகாராதிபதி ஆயின் பாடசாலை → ...................................

1. ஆசிரியர்     2. அதிபர்     3. மாணவன்


33. தொழிற் பெயரைக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்க. → ..................................

1. படித்தல்     2. வடிவம்     3. தை மாதம்

34. முதலாம் உருவில் உள்ள சதுரவடிவமான கடதாசியை இரண்டாம் உருவில் உள்ளவாறு இரண்டாக மடித்து மூன்றாம் உருவில் உள்ளபடி நிறந்தீட்டிய பகுதி வெட்டியெடுக்கப்பட்டது. பின் அதை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் சரியான உரு




உரு. 1




உரு. 2




உரு. 3



1.



2.




3.


35. 20 ஆவது ஒற்றை எண்ணுடன் மிகப் பெரிய ஈரிலக்க இரட்டை எண்ணைக் கூட்டும் போது கிடைக்கும் விடை யாது?


1. 138     2. 140     3. 137

✣ **மின் அலங்காரச் சரம் ஒன்றில் இருந்த மின்குமிழ்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன. இதை அவதானித்து 36 ஆம், 37 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

**குறைவு → கூட**
**கூட ← குறைவு**








36. இங்கு எந்த நிற மின்குமிழ்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன?
   1. மஞ்சள் 2. நீலம் 3. சிவப்பு

37. மின்குமிழ்களின் எண்ணிக்கைகளை குறைந்த எண்ணிக்கையில் இருந்து கூடிய எண்ணிக்கை வரை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் விடை யாது?
   1. மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு 2. சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள்
   3. பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள்

38. ஒரு பாடசாலையில் ஆரம்பப்பிரிவில் 20 நிமிடத்திற்கு ஒரு மணியும், இடைநிலைப் பிரிவில் 15 நிமிடத்திற்கு ஒரு மணியும் ஒலித்தது. காலை 7.30 மணிக்கு இரண்டு மணியும் ஒன்றாக ஒலித்தது எனின் அடுத்து இரண்டு மணிகளும் ஒன்றாக ஒலிக்கும் நேரம் எது?
   1. மு.ப. 8.30 2. மு.ப. 9.10 3. மு.ப 8.15

39. கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள வடிவங்களை அவதானித்து பிழையான விடை உள்ள கூற்றைத் தெரிவு செய்க.



   1. வட்டங்களின் எண்ணிக்கையும் சதுரங்களின் எண்ணிக்கையும் சமன்.
   2. சதுரங்களை விட முக்கோணங்கள் கூடுதலாக உள்ளன.
   3. வட்டங்களை விட முக்கோணங்கள் குறைவாக உள்ளன.

40. ஒரு சம்பவம் தொடர்பான ஐந்து உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவ் உருக்களை சம்பவத் திற்கேற்ப ஒழுங்குப்படுத்தும் போது சரியாக அமையும் விடையைத் தெரிவு செய்க.


**A**


**B**


**C**


**D**


**E**

   1. DEBCA 2. DEACB 3. CDEAB

($40 \times 2\frac{1}{2} = 100$ புள்ளிகள்)